# பெரும்பாணாற்றுப்படை வாழ்வியல் கூறுகள்

**ச. கலைவாணி**
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783441

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்ககாலத்து நூல்கள் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டு ஆகும். பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. முதலாவதாக தமிழரின் பண்பாட்டில் ஒன்றான விருந்தோம்பலின் முறைகளை இதில் காணலாம். அக்காலத்தில் வெகுதூரம் நடந்து வரும் பாணர்களுக்கு குளிர்விக்கும் விதமாக கரும்பு ஆலை இருந்ததை இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்காலத்தில் வரி செலுத்துவதைப் போல சங்க காலத்திலும் வரி செலுத்தி இருப்பதை பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. அதிலும் "உல்குவரி" என்ற வரியையும் செலுத்தி இருப்பது தெரிகின்றது. பாணர்கள் வறுமையில் வாடியதால் நெல்லரிசிக்கு பதிலாக புல்லரிசியை உண்டு வறுமையில் வாடியதை இதன் மூலம் அறியலாம். சங்ககாலத்தில் உழவுத் தொழிலையும் தலைசிறந்ததாக செய்து வந்துள்ளனர். அக்காலத்தில் தீ மூட்டுவதற்கு கற்களை கொண்டு தீயை மூட்டி உள்ளனர். போன்ற தகவல்கள் பெரும்பாணாற்றுப்படையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *ஆற்றுப்படை, விருந்தோம்பல், உணவு, வணிகம்.*

## முன்னுரை

*பெரும்பாணாற்றுப்படையில் சங்க கால மக்களின் வாழ்வியல் கருத்துக்கள் என்ற தலைப்பில் ஒரு சில கருத்துக்கள் காண்போம். பெரும்பாணாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று. பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். தொண்டைமான் இளந்திரையன் பற்றி பாடப்படுகிறது. அவனிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் வறுமையுற்ற மற்றொரு பாணனிடம் ஆற்றுப்படுத்துகின்றான். பரிசில் பெற விரும்பும் பாணனிடம் தொண்டை நாட்டு கடற்கரைக்குச் செல்லும் வழி அங்கிருந்து காஞ்சிக்கு செல்லும் வழி என்று ஆற்றுப்படுத்தும் பெரும்பாணாற்றுப்படையில் வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## விருந்தோம்பல் பண்பு

*விருந்தோம்பல் பண்பு என்பது சங்க தமிழுக்கே உரித்தான தலைசிறந்த பண்பாடு ஆகும். பாலை நிலத்தில் வாழக்கூடிய எய்னர்குல மக்களும் இதை கடைபிடித்தனர் என்ற கருத்தை பெரும்பாணாற்றுப்படை பதிவு செய்கிறது. எய்னர் குல பெண்கள் புல் அரிசியை சமைத்து கருவாட்டோடு தேக்கிலையில் வைத்து தன்னை நாடிவரும் விருந்தினருக்கு கொடுத்தனர். அவர்கள் பாணர்களை தெய்வம் போல் போற்றினர். அவர்கள் உணவளிக்கும் தன்மையினை,*

**"தெய்வ மடையில் தேக்கிலை இவை நம்**
**பைநீர் கரும்போடு பதமிகு பெருகுவீர்"**

*என்ற பெரும்பாணாற்றுப் பாட வரிகள் அவர்களின் விருந்தோம்பல் பண்பினை நமக்கு படம் பிடித்து காட்டுகின்றது.*

**இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு'**

*என்று விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை வள்ளுவரும் பதிவு செய்கிறார்.*

*இதேபோன்று புறநானூற்றில் விருந்தோம்பல் பற்றி மிகச் சிறந்த முறையில் கூறி இருக்கின்றன. அவை,*

*பூவற் படுவீற் கூவல் தோண்டிய*
*செய்க சின்னீர் பெய்த சீறில்*[2]

பகற்பொழுது கடந்து இரவுப் பொழுதில் வீட்டிற்கு வந்த முதியவரான பானனை ஓர் இல்லத்தரசி தன் இன்முகத்துடன் வரவேற்று வீட்டின் உள்ளே அழைத்து விருந்தோம்பல் செய்ய காலம் நேரம் எல்லாம் இல்லை என்று இதன் மூலம் அறிய இயலும்.

**கரும்பு ஆலை**

அந்த காலத்தில் கரும்பு ஆலைகளும் இருந்தன என்பதை பெரும்பாணாற்றுப்படையில் உணரமுடிகிறது. நெடுந்தூரம் பயணம் செய்து வரும் பாணர்களுக்கு கரும்புச் சாறும் வழங்கப்பட்டுள்ளது. இதனை,

**"எந்திரம் நிலைக்கும் துஞ்சாத் கம்பலை"**
**(பெரும்.வ.260)**

என்ற வரிகள் சுட்டுகிறது. இதன் மூலம் கரும்பாலை பயன்பாடு மிகுதியாக இருந்து உள்ளது என்பதை அறிய முடிகிறது.

**சுங்கவரி**

நாம் இந்த காலத்தில் எப்படி வரி செலுத்துகின்றோமோ அதுபோல சங்க காலத்திலும் வரி செலுத்தி உள்ளனர். இந்த வரி செலுத்தும் வழக்கத்தை பெரும்பானாற்றுப்படை கூறுகிறது.

**"புணர்ப்பொறை வடுஆம் நோன்புறுத்து**
**அணர்ச்செவிக் கமதைச் சாடத்தொடு வழங்கும்"**
**- (பெரும்.வ.80)**

இந்த வரிகளை உற்று நோக்கும் போது "உல்குவரி" என்ற ஒருவகை வரியை வாங்கி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

புணர்ப்பொறை என்றது கழுதையின் முதுகில் போடப்படும். சுமை இரு பக்கமும் எடையில் வேண்டுமாதலின் அதை சமம் செய்து புணர்ந்திய சுமையை குறிக்கும்.

**"உல்கு" சுங்கப் பொருள்**

இதனால் பண்டைக் காலத்தை ஒரு நாட்டின் பொருள் மற்றொரு நாட்டில் புகும் பொழுது வலிகளில் மன்னர்கள் சுங்கம் பெற்ற முறையை அறிய முடிகிறது.

**பெண்கள் ஓட்டிய வண்டி**

பெண்கள் அந்த காலத்தில் வண்டி ஓட்டும் பழக்கம் உடையவர்கள் என்ற செய்தியை அறிய முடிகிறது. உமண பெண்கள் அந்த காலத்தில் உப்பு பொதிகள் ஏற்றப்பட்ட மாட்டு வண்டிகளை ஓட்டிச் சென்ற செய்தியை பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. இதனை,

**"கயிறு பிணித்து தாடி வைத்த கலனுடைய மூக்கின்**
**மகவுடை மகடூஉப் பகடுபுறம் துரப்ப"**
**- (பெரும்.வரி 56-57)**

என்ற பாடல் வரிகள் மூலம் பெரும் பாணாற்றுப்படை பெண்மணிகளின் சாதனையை அறிய முடிகிறது.

**வறுமை**

மனிதன் வாழ்வதற்கு உணவு என்பதே இன்றியமையாத ஒன்றாகும். அந்த காலத்தில் எயின நிலத்து மக்களும் கரம்பை நிலத்தை உழி போன்ற கருவியால் கிளறி அடியில் இருக்கும் புல் அரிசியை தோண்டி எடுத்து குற்றி உணவு சமைத்து உண்ட வறுமை நிலையையும் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. ஆயர் குல பெண்களும், சுற்றத்தார்களும் இரவலர்களையும் பேணும் பெருந்தன்மை வாய்ந்தவர்கள்.

**"இருங்கிளை நெண்டின் சிறுபார்ப்பு அன்ன**
**பசுந்திணை முரல் பாலோடு பெருகுவீர்"**
**- (பெரும்.வ.165)**

என்று கூறி பெரும்பாணன் ஆற்றுப்படுத்துகிறான். இவ்வாறு சென்ற இடமெல்லாம் பாணர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது.

**இண்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது**[3]

வறுமையைப் பற்றி வள்ளுவரும் தன் குறளில் கூறியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**உழவுத் தொழில் நுட்பம்**

தமிழர் செய்த தொழில்களிலே உழவுத் தொழில் தான் தலை சிறந்த ஒன்றாகும். உழவுத் தொழில் மிகவும் புனிதமானதும் கூட அதைப்பற்றி பெரும்பாணாற்றுப்படையில்

"ஒரு பலம் புழுதி கால்பலம் புழுதீ" ஆகும்படி உழுது காயவிட்டால் அந்நிலத்தில் பயிர்கள் நன்கு செழித்து வளரும் என்பதை உழவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர். இவ்வாறு நிலத்தை உழும் உழவரை பெரும்பாணாற்றுப்படை "செஞ்சால், உழவர்" என்றும் உழுவதற்கு பயன்படும் கலப்பையை "நாஞ்சில்" எனவும் சுட்டுகிறது இதனை,

**"உடுப்பு முக முழுக் கொழு மூழ்க ஊன்றி**
**தொடுப்பு எறிந்து உழுது துளர்படு துடவை"**
**- (பெரும்.வ.200)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. அக்காலத்தில் உழவுத் தொழிலுக்கு இயற்கை உரம் பயன்பட்டது. காய்ந்த பூக்கள் கூட பயன்படுத்தி உள்ளனர். முற்றி விளைந்த நெல்லை உழவர்கள் அறுவடை செய்தனர். அறுவடை செய்த உழவரை "துமிதித்து வினை ஏர்" என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. உழவர் நெல்லை அறுத்து களத்தில் வைத்து நெல்லை பிரித்தனர் என்பதை,

**"குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சி**
**பகடுஊர்பு இழிந்த பின்றை துகள்தப"**
**- (பெரும்.வ.237)**

என்ற வரிகள் உணர்த்துகிறது. இவர்கள் வாழ்வில் உழவர் தொழில் இன்றியமையாத ஒன்று என அறிய முடிகிறது.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**[4]

என்று உழவர்களின் சிறப்பை வள்ளுவரும் நாட்டிற்கு உரைக்கிறது.

## தீ மூட்டும் செயல்

தீ என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அந்த காலத்தில் மக்கள் நெருப்பு மூட்டும் பழக்கம் கொண்டு இருந்தனர் என்பதை பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

**"ஞெலிகோல் கொண்ட பெருவிரல் நெகிழ்ச்**
**செந்தீத் தோட்ட கருத்துக்களைக் குழலின்"**
**- (பெரும்.வ.178)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

## முடிவுரை

மேற்கண்ட கட்டுரையின் வாயிலில் அந்தக் காலத்தில் மக்கள் விருந்தோம்பலிற்கும், உழவுத் தொழிலுக்கும் எவ்வளவு முக்கியத்துவம் அளித்தனர் என்பதை அறியலாம். இன்றும் அதுபோல் உள்ளதா என்றால் கேள்வி குறிதான் உணவு இல்லையெனில் உலகம் இயங்காது. எனவே உணவு அளிக்கும் உழவைப் போற்றுவோம்.

## சான்றெண் விளக்கம்

1. க.ப.அறவாணன், குறள்.81, ப.எண்.84.
2. புலியூர்க்கேசிகன், புறநானூறு, பா.எ.319, ப.எ.308.
3. க.ப.அறவாணன், குறள்.1041, ப.எண்.366.
4. மேலது, குறள்.1032,ப.எண்.363.

## துணை நூற்பட்டியல்

1. அறவாணன். க.ப., திருக்குறள் தமிழ்க்கோட்டம், 2, முனிரத்தினம் தெரு, அய்யாவு குடியிருப்பு, அமைந்த கரை, சென்னை.
2. திலகவதி. க, சங்க இலக்கியம் புறநானூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.